<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 48/2016 | வா.சா. | : 1 |
| பெயர் | : சந்திரசேகரன் | த/பெ. | : சின்னக்கண்ணு |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : நத்தம் |
| தேதி | : 04.03.2026 | வயது | : 64 /2026 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

<u>1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

2) வாதிகள் எங்களில் ஜோதி என்பவர் பெண்பாலர் என்றால் சரிதான். நாங்கள் எங்கள் வீட்டிற்கு முன்புறம் உள்ள காலி இடத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளோமா அல்லது பாதைக்காக தாக்கல் செய்துள்ளோமா என்றால் பொது பாதைக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளோம். பிராதில் தென்வடல் 20 அடி பாதை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்தப் பாதையானது வாதிகள் மற்றும் ஏனைய குடியிருப்பு வாசிகளுக்கும் பொது மக்களுக்கும் பாத்தியப்பட்ட பொதுப் பாதை என்று விளம்புகை செய்ய பரிகாரம் கோரி உள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் எங்கள் மூன்று பேரை தவிர பொதுமக்களோ குடியிருப்பு வாசிகளோ யாரும் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், அவர்களுக்கும் சேர்த்து வழக்கு நடத்த சொல்லி சொன்னார்கள்.

3) பிரதிநிதித்துவ ஸ்தானத்தில் நான் இந்த வழக்கை நடத்தவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கானது தனிப்பட்ட முறையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் பொதுமக்களுக்காகவும் ஏனைய குடியிருப்பு வாசிகளுக்காகவும் வழக்கை நடத்த முடியாது என்றால் சரியல்ல. அதனால் நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள விவரங்கள் தவறானது என்றாலும் வழக்கை நடத்த முடியாது என்றாலும் சரியல்ல. நான் இந்த வழக்கை 15.06.2016ல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் 11.6.2016ஆம் தேதி 1ம் பிரதிவாதி தனது ஆட்களுடன் வழக்கு சொத்தான பொதுப் பாதையில் சிமெண்ட் ரோட்டை உடைத்து தென்வடலாக சுமார் மூன்று அடி வரை ஆக்கிரமிப்பு செய்து 2x2 என்ற அளவில் குழி தோண்டி ஆக்கிரமிக்க முயற்சி செய்ததாக

தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான்.

4) 1ம் பிரதிவாதி சாலையில் எத்தனைக்கு எத்தனை அடி கட்டுமானம் கட்டுவதற்கு குறியீடு செய்தார் என்றால் தோராயமாக 2x2 என்ற அளவில் குறியீடு செய்தார். தாவா சொத்து உள்ள கிராமம் நடுமண்டலம் கிராமம் என்றால் சரிதான். நடுமண்டலம் கிராமம் ஊராட்சி பஞ்சாயத்திற்கு கட்டுப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் நடுமண்டலம் கிராம ஊராட்சி மன்ற தலைவரை ஒரு தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். ஊராட்சி மன்ற ஆணையாளர் வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். 4ம் பிரதிவாதியான வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களை நான் இந்த வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவர் தானாக இந்த வழக்கில் மனு செய்து கட்சி சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி இந்த வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது எனது வழக்கறிஞருக்குதான் தெரியும். எனது வழக்கறிஞர் 4ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை மற்றும் அதில் உள்ள சங்கதிகள் குறித்து எனக்கு சொன்னாரா என்றால் இல்லை.

5) இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையாளர் இருமுறை ஆக்கிரமிப்பு குறித்து ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். இ.ம.எண்.312/2016ல் 11.10.2017ம் தேதி நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் சர்வே எண். 529/10A2A என்பதில்தான் தாவா சொத்தான சிமிண்ட் ரோடு அமைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான், பிராதில் வழக்கு சொத்தாக சர்வே எண். 529/10A என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான், ரீசர்வேயில் மாற வாய்ப்புக்கள் உள்ளது. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் லேஅவுட் படி 20 அடி அகலம் எனவும், ஆனால் சர்வே அளவின்படி 19 அடி தான் உள்ளது என்றும், சர்வேயர் தெரிவித்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் அது பற்றி தெரியாது.

6) மேலும் அவர் அறிக்கையில் வட பகுதியில் 2–3/4 அடி அளவிற்கும் தென்பகுதியில் 1–1/4 அடி அளவிற்கும் கம்பி வேலி அமைத்துள்ளதாக தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி இடத்திற்கு மேற்கே தென் வடலாக நத்தம் செந்துறை ரோடு செல்கிறது என்றால் சரிதான். அந்த ரோடு தென் வடலாக செல்கிறது என்றால் சரிதான். அதன் கிழக்கு பகுதியில் தாவா பாதை கிழ மேலாக செல்கிறது

என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் வழக்கு சொத்தில் கிழமேல் மேற்கு புறம் அளக்கும் போது சிமிண்ட் ரோடு 20 அடி இல்லை என்றும், 15 அடிதான் இருந்ததாக தெரிவித்து தென்மேற்கு மூளையில் கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி அமைத்துள்ள கம்பி வேலி பகுதியில் சுமார் 1–1/4 அடி அளவிற்கு உள் செல்வதாக தெரிவித்துள்ளார் என்றால் சரிதான்.

7) 1ம் பிரதிவாதி தரப்பில் ஆக்கிரமிப்பு எதுவும் செய்யப்படவில்லை என்று தெரிவித்து இ.ம.எண்.71/2018 தாக்கல் செய்து அதன்படி அதே நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை மீண்டும் அளவீடு செய்தார் என்றால் சரிதான். 17.03.2020ம் தேதியில் மேற்படி இ.ம.எண்.71/2018ல் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில் பக்கம் 3ல் சர்வே எண்.529/10A2A என்ற தாவா சொத்தான சிமெண்ட் ரோடு அமைந்துள்ளது என்றும் அந்த சர்வே எண் ஆனது அடங்கல் பதிவேட்டில் தைலம்மாள் வகை என்ற பெயரில் உள்ளதாகவும் பல பிளாட்டுகள் உட்பிரிவு செய்யப்படாததால் பாதை போன்ற வகைப்பாடு செய்யப்படவில்லை என்றும் தாவா பாதையின் வடபகுதியினை மட்டும் குறிப்பிட்டு அளவீடு செய்ய இயலாது என்றும், மொத்தமாக தான் அளவீடு செய்ய இயலும் என்றும் தெரிவித்துள்ளார் என்றால் சரிதான்.

8) 1ம் பிரதிவாதி தென்பகுதியில் அமைத்துள்ள கம்பி வேலி பகுதியில் உள்ள முதல் பில்லரில் 1–1/2x1–½ அடி அகலம் உள்ள பில்லரில் 1–½ அடி உள் செல்வதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். திருத்தல் பிராதில். 1–1/2x1–½ அடி அகலம் உள்ள பில்லர்களை அகற்றக் கோரி பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். பொதுவாக இதுபோன்ற அளவீடுகளில் அளவீடு செய்யும்போது 100 மீட்டர் அளவீடு செய்யும்போது சுமார் 1 மீட்டர் அளவிற்கு கூடவும், குறையவும் வாய்ப்புள்ளதாக சர்வேயர் தெரிவித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். வாதிகள் கிரையம் பெற்றுள்ள சொத்திற்கு தனிப்பட்டா ஏற்பட்டதா என்றால் ஏற்பட்டுள்ளது. அந்த பட்டா ஊர்ஜிதமான பட்டா ஆகும், தோராய பட்டா கிடையாது. அந்த பட்டாவில் வரைபடம் வரைந்து அடி அளவுகளும், விஸ்தீரணம் போடப்பட்டிருக்கும் என்றால் சரிதான்.

9) நான் எங்கள் 3 பேர் பட்டாவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், வழக்கிற்கு பின்பு பட்டா வழங்கப்பட்டதால் தாக்கல் செய்யவில்லை. பட்டாவை தாக்கல் செய்யலாம் என்றால் சரிதான். எனது பிளாட் எண் 8 ஆகும். எனது கிரையப் பத்திரம் வா.சா.ஆ.7 ஆனது தங்கராஜ் வகையராவிடமிருந்து நான் கிரையம் பெற்றது என்றால்

சரிதான். பாதைக்கு வடபுறம் எனது பிளாட் உள்ளது என்றால் சரிதான். எனது கிரைய பத்திரத்தில் தென்புறம் கிழமேல் வீதி என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், அடி அளவுகள் குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரிதான். நான் 1200 சதுர அடி கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். கிழமேல் 40 அடி, தென்வடல் 30 அடி என்றால் சரிதான். தென்வடல் 25 அடிக்கு கட்டிடம் கட்டப்பட்டு முன்புறம் 10 அடிக்கு காலியிடம் விடப்பட்டு அதையும் சேர்த்து பிளான் அப்ரூவல் பெறப்பட்டுள்ளது என்றாலும், அதற்கு அடுத்து 20 அடி தென்வடல் பாதை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கியது 30 அடிக்குதான் என்றாலும், ஆனால் பிளான் அப்ரூவல் ஆனது 35 அடிக்கு வாங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

10) வா.சா.ஆ.11 – 3ம் வாதி ஜோதி என்பவரது கிரைய ஆவணத்தில் தெற்கு புறத்தில் 20 அடி கிழ மேல் வீதி என்று குறிப்பிடப்பட்டுள்ளதற்கு பொதுப்பாதை என்பதற்கு அரசு ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.15 கிரைய ஆவணத்தில் நான்குமாலில் 20 அடி அகல பொது வீதி என்று தெற்கு பக்கம் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாதைக்கும், வீதிக்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். இடத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பு அளந்து பார்த்தேனா அல்லது முன்பாத்தியஸ்தர் கிரைய ஆவண அடிப்படையில் போடப்பட்டதா என்றால் பிளாட் பிரிக்கப்பட்டதன் அடிப்படையில் கிரைய ஆவணங்கள் போடப்பட்டது.

11) பிராதில் 25.09.2001ல் லே அவுட் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். லே அவுட் அங்கீகாரம் புதுப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் வாங்கினேன், நத்தம் ஊராட்சி ஒன்றியத்தில் வாங்கவில்லை. வா.சா.ஆ.1ன்படி 32 பிளாட்டுகள் பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி புதுப்பட்டி ஊராட்சி ஒன்றிய தலைவர் இந்த வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளது தெரியும். அவர் எதிர் வழக்குரையில் வா.சா.ஆ.1 ஆவணம் தங்கள் அலுவலகத்தில் கோப்பு இல்லை என்று தெரிவித்துள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. நான் சொல்வது போல் 25.09.2001ல் லே அவுட் அங்கீகாரம் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. பாதைக்கு தென்புறம் 1ம் பிரதிவாதியின் சகோதரர் அன்பழகன் என்பவருக்கு 05.04.1994 கிரைய பத்திரப்படி 25 செண்ட் கிரைய பாத்தியம் என்றாலும், மேற்படி ஆவணத்தின்படி மொத்த விஸ்தீரணம் 10,900 சதுர அடி என்றாலும் அவருக்கு வழங்கப்பட்ட பட்டாவில் 10,769 சதுர அடி என்றாலும்,

அதில் அவருக்கு பட்டா படி 131 சதுர அடி குறைவு ஏற்பட்டுள்ளது என்றாலும், மேற்படி குறைவான 131 சதுர அடி அந்த இடத்தில்தான் உள்ளது என்றாலும், வருவாய்துறை பதிவுகளில் சர்வே எண்.529/10A என்பது 10 உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்றும், அதில் பாதை போன்ற வகைபாடு இல்லை என்றும் வருவாய்துறையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. நான் சர்வே எண்.529/10A2A ஆனது பாதையாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல.

12) 1ம் பிரதிவாதி பாதையை ஆக்கிரமிப்பு செய்துவிட்டார் என்பதற்கு அரசு அதிகாரிகளிடம் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி சொன்ன விபரங்களின் அடிப்படையில் பிராது பாரா 14 முதல் 18 வரை சேர்க்கப்பட்டுள்ள பாராக்களில் உள்ள விபரங்கள் தவறானது என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் ஆய்வு செய்ததாகவும், 1–¼ அடி ஆக்கிரமிப்பு உள்ளதாக தெரிவித்துள்ளதன் அடிப்படையில் பிராது சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது தவறானது என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி எங்களுக்கு சாதகமாக எங்களிடம் ஆதாயம் பெற்று அவசியம் இன்றி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி அளந்ததன் அடிப்படையில் ஆக்கிரமிப்பு தெரிய வந்ததாக வழக்கு மூலத்தில் குறிப்பிட்டுள்ளது தவறானது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி அவரது இடத்தில்தான் எங்களுக்கு வரக்கூடிய மின் இணைப்பிற்கான மின் கம்பம் ஊன்ற இடம் கொடுத்துள்ளார் என்றாலும், அவர் சமூகத்தில் நல்ல காரியங்கள் செய்யும் நபரை தவறாக சித்தரித்து வழக்கு தாக்கல் செய்துள்ளது தவறானது என்றாலும், அவர் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றாலும், வழக்கு பரிகாரம் கிடைக்கக்கூடியது இல்லை என்றாலும் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 04.03.2026 கையெழுத்து செய்துள்ளார்.

J Aafreen Begum M.com., L.L.M.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.L.M.,
Date: 2026.03.04 13:23:18 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.